# FIRST INTERNATIONAL SAIVA CONFERENCE - 2016

## CONFERENCE PROCEEDINGS



ISC
2016

12 ,13,14 February 2016
Department of Hindu Civilization
Faculty of Arts
University of Jaffna, Sri Lanka.

# அனைத்துலகச் சைவ மாநாடு - 2016

"சிவாகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சைவப் பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளும்"

# ஆய்வடங்கல்

**ISC**
**2016**

பெப்ரவரி - 12,13,14 - 2016
இந்துநாகரிகத்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

முதலாவது அனைத்துலகச் சைவ மாநாடு - 2016

ISSN No : 2478 - 0634

**பதிப்பாசிரியர் குழு**

**பிரதம பதிப்பாசிரியர்**

பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன்

**பதிப்பாசிரியர்கள்**

திரு. ப. கணேசலிங்கம்

கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறீமுரளிதரன்

கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவனேசன்

திரு. ச. முகுந்தன்

திரு. ச. பத்மநாபன்

திரு. பொ. சந்திரசேகரம்

திரு. சி. ரமணராஜா

திரு. தி. செல்வமனோகரன்

திரு. க. கந்தவேள்

**பொறுப்புக்கூறல்**

இவ்வாய்வடங்கலில் இடம்பெற்றுள்ள ஆய்வுக்கட்டுரைகளின் அனைத்துக் கருத்துக்களுக்கும் குறித்த கட்டுரைகளின் ஆசிரியர்களே முழுப்பொறுப்பாளிகள் ஆவர்.

# சைவக்கோயிற் கட்டடக்கலையில் கர்ப்பக்கிருகம் - சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டது.

சி. சுகந்தினி

**ஆய்வுச் சுருக்கம்**

சைவப்பண்பாட்டில் சமயம், தத்துவம், கலை ஆகிய துறைகளை நெறிப்படுத்துவதில் சிவாகமங்கள் சிறப்புப்பெறுகின்றன. சிவாகமங்கள் கூறும் சைவக்கோயில் அமைப்பானது கர்ப்பக்கிருகத்தை மையமாகக் கொண்டது. உயிரினங்களின் தோற்றத்திற்கு எப்படி கர்ப்பம் முக்கியமானதோ அதேபோல தெய்வீகம் மிளிர்வதற்கு புனிதமான மையப்பகுதியாகக் கர்ப்பக்கிருகம் கொள்ளப்படுகின்றது. இவ்வகையாக முக்கியத்துவம் பெறும் கர்ப்பக்கிருக அமைப்பு விதிமுறைகளை சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டு எடுத்துக்கூறுவதும், யாழ்ப்பாண சைவக்கோயில்கள் சிவாகமங்கள் கூறுகின்ற விதிமுறைகளை எந்தளவிற்கு பேணுகின்றன என்பதையும் இவ்வாய்வானது தெளிவுபடுத்துவதாக அமைகின்றது.

**திறவுச்சொற்கள் :** சிவாகமங்கள், சைவம், திருக்கோயில், கர்ப்பக்கிருகம்.

## அறிமுகம்

சைவப்பண்பாட்டின் நிலைக்களனாக விளங்குபவை திருக்கோயில்கள் ஆகும். அவை அப்பண்பாட்டின் நிறைவடிவமாகவும் விளங்குகின்றன. பன்னெடுங்கால மாக படிமுறை வளர்ச்சிபெற்ற கோயிற் கட்ட டக்கலை இந்து அறிவியலின் ஒரு முக்கிய கூறாக விளங்குகின்றது. நிறைவான வளர்ச்சி பெறுகின்ற போது அவை சாஸ்திர மரபையும், கலை மரபையும் ஆத்மிகத்தோடு இணைத்து நிற்கும் சாதனமாகவும் விளங்குகின்றது. அத்தகைய திருக்கோயில்கள் தன்னகத்தே கொண்டுள்ள பிரதான கூறுகளில் கர்ப்பக்கி ருகம் உயர்ந்த தத்துவமும், உட்பொருளும், அளவுப்பிரமாணங்களும் கொண்டு விளங் குகின்றன.

சைவக்கோயிற் கட்டடக்கலை உறுப்புக் களின் மையமாக விளங்கும் கர்ப்பக் கிருகத்தின் அமைப்பு விதிமுறைகளை சைவத்தின் முதல்நூல்களாக விளங்குகின்ற சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டு எடுத்துக்கூறுவது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். சிவாகமங்கள் இருபத் தெட்டாகும். எனினும் சைவக்கோயிற் கட்டடக்கலை பற்றி சிறப்பாகக்கூறுகின்ற காமிகாகமமும், காரணாகமமும் இவ்வாய்வின் மூல நூல்களாக பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாய்வானது விபரண ஆய்வு முறை, பகுப்பாய்வு முறை ஆகிய ஆய்வு முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், இவ்வாய் வுக்கான விடயங்கள் களஆய்வு மூலம் வெளிக் கொணரப்படுகின்றது. சிவாகமங்கள்கூறுகின்ற சைவக்கோயிற்கட்டடக்கலை உறுப்புக்களின் மையமாக விளங்குகின்ற கர்ப்பக்கிருகம் மட்டுமே ஆய்வு செய்யப்படுகின்றது. சிவாகமம் கூறுகின்ற கோயில் கட்டடக்கலை அமைப்பு விதிமுறைகளை யாழ்ப்பாணப்பிரதேச சைவக் கோயில்கள் எந்தளவிற்கு பேணியுள்ளன என்பதனை தொடர்புபடுத்தி ஆராய்வதாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

## சிவாகமங்கள்

சிவாகமங்கள் சைவத்தின் கருவூலங்கள். அவற்றிற்கு முதல்வன் சிவனே என்பது

கலாநிதி முதுநிலை விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,